2nd November 1962]

Huts in panchayat areas (exemption from tax)

* 1129 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to exempt huts in the panchayat areas from the imposition of tax; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பஞ்சாயத்து ஆக்ட் 1950-ன் படி குடிசைகளுக்கு வரி விதிக்கக்கூடாது என்று இருந்தது. 1958 ஆக்டில் வரி விதிக்கலாம் என்று சொல்லப்பட்டுவிட்டது. இதனால் ஏழைகளின் குடிசைகளுக்குக்கூட வரி விதிக்கிறார்கள். ஏழைகள் பாதிக்கப்படுவதால், பஞ்சாயத்துக்களில் இருந்து கோரிக்கைகள் வந்தால் இவற்றுக்கு அரசாங்கம் விதிவிலக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பு இல்லாத ஒரு ப்ரொவிஷன் இந்தச் சட்டத்தில் இருக்கிறது என்றால் அதற்கு இந்தச் சட்டமன்றத்தைதான் கேட்கவேண்டும். இதிலே குடிசைகளுக்குக்கூட வரியா என்றால் குடிசைகூட இல்லாதவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இவர்களும் தங்களுக்கு முடிந்த ஒரு சிறு பங்கையாவது செலுத்தவேண்டும் என்றுதான் இவ்வாறு செய்யப்பட்டது.

அனல் மின்சார நிலையம்

* 1130 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் தனியார் துறையில் அனல் மின்நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு சர்க்கார் அனுமதித்துள்ளதா?

(இ) அப்படியென்றால் எவ்வளவு தொகையில்?

(உ) இந்த நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை கிலோ வாட் மின்சாரம் உற்பத்தியாகும்?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) The Government have received a proposal sponsored by a group of industrialists to set up a thermal power station in private sector near Madras primarily to meet their own power requirements. This proposal has the support of this Government. It is proposed to address the Government of India for their approval of this scheme.

(இ) According to the sponsors the project may cost about rupees 6 crores.

(உ) The installed generating capacity of the station will be 60 M.W.

[2nd November 1962

திரு. வை. சங்கரன்: ஏற்கனவே இதுசம்பந்தமாக மத்திய அரசாங்கத்தார் தனியார் துறையில் அனல் மின்நிலையம் ஏற் படுத்துவதற்கு அனுமதி தர மறுத்தார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தத் திட்டத்தை ப்ளானிங் கமிஷன் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய சர்க்காரினுடைய தொழில் கொள்கை அடிப்படையில் மின்சார உற்பத்தி சர்க்கார் துறையில்தான் இருக்கவேண்டுமென்று முடிவுசெய்தார்கள்.

முந்திரிச்சாகுபடி

*1131 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் காட்டுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரிச் செடி பயிர் செய்வதற்காக எத்தனை ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன?

(இ) அழிப்பதற்கு ஆன செலவு என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரிச் செடிகளைப் பயிரிடுவதற்காகக் காடுகள் அழிக்கப்படவில்லை. ஆனால், முந்திரிச் செடிகளை நடுவதற்கு முன் இம்மாவட்டத்திலுள்ள அழிந்துபோன முன்னாள் ஜமீந்தாரிக் காடுகளிலுள்ள புதர்களும், தரம் குறைந்த சிறு மரங்களும் அகற்றப்படுகின்றன.

*1132 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர்களில் முந்திரிச் செடி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது?

(இ) சென்ற ஆண்டில் அதற்கான செலவென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) விவசாய இலாகாவால் நிறைவேற்றப்பட்டுவரும் முந்திரி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 73 ஏக்கர் நிலம் முந்திரிச் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் காட்டு இலாகாவால் நடத்தப்பட்டுவரும் ஒரு திட்டத்தின்கீழ் 4,301 ஏக்கரா காட்டு நிலம் முந்திரிச் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ) விவசாய இலாகாவால் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டத்தின் கீழ் 1961-62-ம் ஆண்டில் விவசாயிகளுக்கு கடனாக ரூ. 5,860 அளிக்கப்பட்டது.

1961-62-ல் காட்டு இலாகாவால் ரூ. 71,605 முந்திரி பயிருக்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது.